# தேசிய கனியக் கொள்கை

**(ஹைட்ரோகாபன்கள் தவிர)**

**2023**

**சுற்றாடல் அமைச்சு**

**இலங்கை**

## அறிமுகம்

புதுப்பிக்க முடியாத நிலையைக் கொண்ட இயற்கை வளங்களாகக் கனியங்கள் காணப்படுகின்றன. ஒரு முறை மட்டுமே பயன்படுத்தக் கூடிய, எதிர்க்கால சந்ததியினருக்கு நாம் விட்டுச் செல்ல வேண்டிய வளங்களாக அக் கனியங்கள் காணப்படுகின்றன. இதனால் எதிர்க்காலத்தில் கனிய வளத்தை மிகச் சிறந்த முறையில் பயன்படுத்துதல் தொடர்பாகக் கலந்தாலோசிக்க முடியாத நிலை காணப்படுவதுடன், அதன் ஊடாகப் பொருத்தமான பலன்களைப் பெற்றுக் கொள்ளல் தொடர்பான கொள்கைகளை அடையாளம் காண வேண்டியுள்ளது. கனியங்களை வினைத் திறன் மிக்கதாகப் பயன்படுத்துவதையும், அதன் தரத் தன்மை மற்றும் அதன் அளவு தொடர்பாக சரியாக அடையாளம் காண்பதும் மிக முக்கியமான மற்றும் முதன்மை மிக்க விடயங்களாகக் காணப்படுகின்ற. நாட்டிலுள்ள கனியத் தோற்றுவாய்களை அளவீட்டு ரீதியாக வரைபடமாக்கிய பிற்பாடு, தேவையற்ற பிரித்தெடுப்பு நடவடிக்கைகளின் பிற்பாடு சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பாகப் பொருத்தமான அகழ்வுச் செயன் முறைகள் அறிமுகப்படுத்தப்படுவதுடன், அடையாளம் காணப்பட்ட கனிய மூலாதாரங்களை அதி கூடியளவில் பயன்படுத்துவதற்குத் தேவையான மூலோபாயங்களும் விருத்தி செய்யப்படும். இதன் போது கனியப் பயன்பாடு மற்றும் அதன் பேண்தகு பயன்பாடு தொடர்பாக முறையான ஒரு சீர்த்திட நிலையை உருவாக்கும் பொருட்டு கடந்த கால விடயங்கள் தொடர்பாக ஆராயப்படும். செழிப்பு மிக்க மற்றும் எனினும் தூண்டல் மிக்க சுற்றாடல் அம்சங்களினால் பூரணத்துவம் பெற்ற இலங்கையின் சுற்றாடல் செழிப்புத் தன்மையை அடையாளம் கண்ட வண்ணம் கனியங்களுடன் தொடர்புடைய செயற்பாடுகளுக்கு மிக நுணுக்கமான கொள்கைகள், கோட்பாடுகள் மற்றும் வணிக வழிகாட்டல்களின் கீழ் மாத்திரமே அனுமதி வழங்கப்படுவதுடன், சுற்றாடல் தாக்கங்களை குறைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளுடன் கூட்டிணைந்ததாக இவ் விடயம் சான்றுபடுத்தப்படும்.

நடைமுறையிலுள்ள கனியக் கொள்கை 1999 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டதுடன், இவ் ஆவணத்தின் ஊடாக கலந்தாலோசிக்கப்படுள்ள விடயங்களுக்குச் சமமான விடயங்கள் அதனுள் உள்ளடங்கின்றன. எவ்வாறாயினும், நடப்பு சமூக பொருளாதார எதிர்க்கால சுட்டியின் ஊடாக திருத்தப்பட்ட கனியக் கொள்கையின் தேவை தொடர்பில் அடையாளம் காணப்பட்டுள்ளது. அதன் வாயிலாக, புதிய கொள்கையின் ஊடாக உள் நாட்டுக் கனியங்களின் ”உள்ளக தரத் தன்மை” மற்றும் கனிய ஏற்றுமதியின் வாயிலாக அண்ணிய செலாவணி நாட்டை வந்தடைவதைக் கண்காணித்தல் மற்றும் அதிகாரம் பெறச் செய்யும் செயன் முறையின் தேவை தொடர்பாக சுட்டிக் காட்டப்படுகின்றது. இக் கொள்கையின் மூலம், கடலுக்கடியில் காணப்படுகின்ற கனிய வளங்கள் மற்றும் கனியங்களுடன் தொடர்புடைய செயலாற்றுகை மற்றும் தொடர்புடைய காணிப் பிரச்சினைகளைத் தீர்த்தல் தொடர்பாகவும் கவனம் செலுத்துதல் நோக்கமாகக் காணப்படுகின்றது.

இவ் ஆவணத்தின் நோக்கம் கொள்கைகளையும், கோட்பாடுகளையும் பரந்தளவில் அடையாளம் கண்டு கொள்வதாகவும் காணப்படுகின்றது. கீழ் மட்டத்தில் செயற்படுத்தக் கூடிய செயலாற்றுகைத் திட்டத்தினுள் கொள்கைகளை உள் நுழைப்பதற்குத் தேவையான ஒரு பகுதியாக உபாய வழிகளை ஒன்று சேர்த்தல் எனும் விடயம் அறிமுகப்படுத்தப்படும். இக் கொள்கை சட்டகம், தொடர்புடைய துறைகளின் செயலாற்றுகைத் திட்டத்தை விருத்தி செய்வதற்குப் பொருத்தமான நிறுவனங்களுக்கான வழிகாட்டியாகச் செயற்படும்.

## நோக்கம்

இவ் ஆவணத்தின் நோக்கம் நாட்டின் கனிய வளங்களை முறையாக நிர்வகிப்பதை உறுதிப்படுத்தும் கட்டமைப்பையும், வழிகாட்டுதல்களையும் உருவாக்குவதாகக் காணப்படுகின்றது. ஹைட்ரோகாபன்கள் பல்வேறு கண்ணோட்டங்களின் கீழ் உருவமைக்கப்பட்டு நிர்வகிக்கப்படுவதால் அவை இக் கொள்கையிலிருந்து விலக்கப்பட்டுள்ளன.

## கொள்கை இலக்கு

வரி விதிப்பு, தனித்துவத் தன்மை, இலாபமீட்டலின் வாயிலாக நாட்டிற்கு கிடைக்கக் கூடிய வருவாயை அதிகரித்தல், சிறு அளவிலான கனியங்களுடன் தொடர்புடைய பாரம்பரிய கைத்தொழிலைப் பாதுகாத்தல் மற்றும் பொருத்தமான தொடர்புபடுத்துகைகள் போன்ற செயற்பாடுகளின் வாயிலாக போட்டித் தன்மையுடன் கூடிய அடிப்படையில் செயற்படக் கூடிய வாய்ப்பு கிடைக்கும். மேலும், பெறுமதி ஒன்று சேர்க்கையின் ஊடாக கனிய ஏற்றுமதியை ஊக்குவித்து நாட்டின் கனிய வளங்களின் நன்னெறி மிக்க பயன்பாட்டை உறுதிப்படுத்துவதும் நோக்கமாகக் காணப்படுகின்றது. பரிமாற்றம், குறிப்பாக தனியார்ப் பிரிவின் முதலீடுகளின் ஊடாக பெறுமதி ஒன்று சேர்க்கை, வரையறைகள் மற்றும் / அல்லது தேவையான வகையில் பெறுமதி ஒன்று சேர்க்காத அல்லது மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் பெறுமதி ஒன்று சேர் வகையில் கனியங்களின் ஏற்றுமதி செய்யப்படுவதை இடை நிறுத்துதல் அல்லது மிகச் சிறந்த வாழ்க்கை முறைக்கு பங்களிப்பை வழங்கக் கூடிய வகையில் உள் நாட்டு பாவனை தொடர்பாக போட்டித் தனமையுள்ள விலைகளின் கீழ் மண் கனியம் பெறப்படுவதை உறுதிப்படுத்துவதற்கும் வாய்ப்பு கிடைக்கும். மேலும், பேண்தகு அடிப்படையில் சுற்றுச் சூழல் பாதுகாக்கப்படுவதுடன், குடி மக்களுக்குத் தரமுயர்ந்த கனியங்களை வழங்குவதும் இதன் கீழான நோக்கங்களாகக் காணப்படுகின்றன.

## நோக்கங்கள்

1. கனியக் கைத்தொழில் பிரிவை வினைத் திறன் மிக்கதாக முகாமைத்துவப்படுத்தும் நோக்கில் நாட்டிலுள்ள கனியத் தோற்றுவாய்களை ஆராய்தல், மதிப்பிடுதல் மற்றும் பகுப்பாய்வு செய்தல்.

2. தேசிய சுற்றாடல் சட்டத்தின் சட்டக எல்லையினுள் செயற்பட்ட வண்ணமும், கைத்தொழில் மற்றும் சுற்றாடல் ஆகிய இரு துறைகளையும் பாதுகாத்த வண்ணமும் வினைத் திறன் மிக்கதாகவும், பேண்தகு அடிப்படையிலும் கனியங்களையும், சுரங்க அகழ்வு செயற்பாடுகளையும் கண்காணித்தல்.

3. கனியங்களுக்கு பெறுமதி ஒன்று சேர்த்தல் மற்றும் உற்பத்தியை மேம்படுத்தும் பொருட்டு நாட்டுக்கென பெற்றுக் கொள்ளக் கூடிய அதி கூடிய பலன்களை பெற்றுக் கொள்வதற்கு ஊக்குவித்தல் மற்றும் தேவையான வசதிகளை ஏற்பாடு செய்தல்.

4. பொருத்தமான கொள்கை செயற்படுத்துகைகள், சட்ட விதிகள் மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட தராதரங்களுடன் கூடியதாக ஆராய்ச்சிகள் தொடக்கம் உற்பத்தி மேம்படுத்துகை வரை கனியக் கைத்தொழிலின் விருத்திக்கென போட்டித் தன்மையுள்ள, வெளிப்படைத் தன்மையுடன் கூடிய மற்றும் சுழல் நேயமிக்க சுற்றுச் சூழலை உருவமைத்தல்.

கனியங்கள் எனப்படுவது நாட்டின் பொருளாதாரத்தை வலுவூட்டும் பொருட்டும், விருத்தி செய்யும் பொருட்டும் மிகப் பெருமளவில் பங்களிப்பை வழங்கக் கூடிய புதுப்பிக்க முடியாத பதார்த்தங்களாகக் காணப்படுகின்றன. இதனால், ஏற்கனவே காணப்படக் கூடிய வளங்களை பேண்தகு அடிப்படையில் பயன்படுத்துதல் மக முக்கியமான விடயமாகக் காணப்படுவதுடன், எதிர் வரும் காலப் பகுதியில் ஏற்படக் கூடிய தாக்கங்கள் தொடர்பாக மிகச் சிறந்த தெளிவுத் தன்மையுடன் மாற்றீடுகளை அறிமுகப்படுத்த வேண்டியுமுள்ளது. பெறுமதி ஒன்று சேர்க்காத ஏற்றுமதி மற்றும் சுரண்டல்கள் வாயிலாக கனிய வளங்கள் குறைவடைதல், பெறுமதி ஒன்று சேர்ப்பதற்குத் தேவையான புதிய தொழில் நுட்பங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பாக புதிய முதலீடுகள் காணப்படாமை போன்ற விடயங்களை அத்தகைய சவால்களினுள் உள்ளடக்கலாம்.

**பொருள் விளக்கம்**

1. **கனியங்கள்** : இக் கொள்கையின் கீழ், ”கனியங்கள்” எனப்படுவது கடலினுள், மேற் தளம், மேற் தளத்திற்கு அருகில் மற்றும் / அல்லது உட்புற படலத்தினுள் பரம்பிய வண்ணமுள்ள இயற்கையாகக் காணப்படக் கூடிய நிலத்திலுள்ள பதார்த்தங்கலாகக் காணப்படுகின்றன.

2. **நாடு** : உள்ளக நீர், பிராந்தியக் கடல், அண்மித்த வலயம், வரலாற்று சிறப்பு மிக்க நீருடல்கள், விசேட பொருளாதார வலயங்கள் மற்றும் பரந்துபட்ட உள்ளகக் கடல் நிலப் பரப்புகள் இதனுள் உள்ளடங்குகின்றன.

3. **பெறுமதி ஒன்று சேர்த்தல்** : ”பெறுமதி ஒன்று சேர்த்தல்” எனும் விடயத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட சுரங்க அகழ்வு, பலன் கையளிப்பு, தயாரிப்பு மற்றும் உற்பத்தி மேம்பாடு மற்றும் தேவையின் பிரகாரம் பெருமளவில் கனியத்தின் உண்மைப் பெறுமதிக்கு சார்பாக அதன் பெறுமதியை அதிகரிக்கக் கூடிய சந்தை நிலைப்பாடுகளை அதிகரிக்கக் கூடிய வாய்ப்புகளை அடையாளம் காணல் போன்ற எந்தவொரு செயற்பாடும் உள்ளடங்கும். அத்தகைய கனிய வகைகளை பெறுமதி ஒன்று சேர் வகையில் அமைந்த உற்பத்திகளாக மாற்றீடு செய்வதற்கான முதலீடாக இச் செயற்பாடு அமையும்.

4. **பூஜ்ஜியக் கழிவு** : பிரித்தெடுக்கப்பட்ட இலக்கிட்ட கனியங்கள் மற்றும் அத்தகைய கனியங்களுடன் தொடர்புடைய ஏனைய கனியங்களை 100% ஆன நம்பகத் தன்மையுடன் கூடியதான செயற்பாடுகளுக்குப் பயன்படுத்துமிடத்து அவை ”பூஜ்ஜியக் கழிவு” என கருதப்படும்.

5. **கனியக் கைத்தொழிலாளி** : அரச அதிகார நிறுவனத்தின் கீழ் கனிய ஆராய்ச்சி, சுரங்க அகழ்வு, போக்குவரத்து மற்றும் உருவமைப்பு செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள நிறுவனம்.

6. **சுரங்க அகழ்வு** : இயற்கை செயற்பாடுகளின் ஊடான கனியப் பிரித்தெடுப்பு மற்றும் / அல்லது ஒன்று சேர்க்கை.

**கோட்பாடு 1 :**

**அரசுக்கு உரித்தான தமது ஆளுகைப் பிரதேசங்களில் காணப்படுகின்ற நிலத்தடி வளத் தோற்றுவாய்களை இனங் காண வேண்டியுள்ளது.**

**கூற்று :**

அவ் ஆளுகைப் பிரதேசத்தினுள் கனிய வளங்கள் தொடர்பான தெளிவுத் தன்மையை பெறுதல் அரசின் பொறுப்பாகக் காணப்படுவதுடன், அப் பிரிவை முறையாக முகாமைத்துவப்படுத்துதல் பிரதானமான தேவையாகவும் காணப்பட வேண்டும். அதன் பலனாக கனிய வள முகாமைத்துவம் தொடர்பாகப் பரந்தளவில் தெளிவுத் தன்மையைப் பெற்றுக் கொள்வதற்கு அனைத்து விதமான நடவடிக்கைகளையும் முன்னெடுக்க வேண்டியுள்ளது. இதற்கென தேசிய பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் சார் தேவைகளைத் தவிர, இராச்சியத்திற்குத் தமது ஆளுகைப் பிரதேசம் முழுதும் கனிய ஆராய்ச்சி தொடர்பாக மட்டுப்படுத்தப்படாத முடியாத உட் பிரவேசிப்பு காணப்பட வேண்டும்.

**உபாய வழி :**

(அ) கனிய வளங்கள் தொடர்பான விபரமான மற்றும் உயிர்ப்புத் தன்மையுள்ள தகவல் தொகுதியொன்றை உறுவமைக்கும் பொருட்டு பல்வேறு நிறுவனங்களிடையே பரம்பியுள்ள தரவுகள் மற்றும் தகவல்கள் ஒன்று சேர்க்கப்படும்.

i. கனியங்கள் தொடர்பான கூட்டுத் தரவுத் தொகுதியொன்றை உறுவமைக்கும் பொருட்டு தனியார் மற்றும் அரச ஆகிய இரு பிரிவுகளும் பல்வேறு நிறுவனங்களிலிருந்து கனியங்களுடன் தொடர்புடைய தரவுகளை ஒன்று சேர்க்கும்.

ii. கனிய வளங்கள் தொடர்பான ஆராய்ச்சிச் செயற்பாடுகளின் வாயிலாக பெறப்படுகின்ற அறிவுத் திறன், கனியங்களுடன் தொடர்புடைய தகவல் தொகுதியைப் புதுப்பிக்கும் பொருட்டு பகிர்ந்தளிக்கப்படும்.

(ஆ) நாட்டின் கனிய வளங்கள் (அதிகாரமுள்ள முற்று முழுதான ஆளுகைப் பிரதேசம்) தொடர்பில் மதிப்பிடும் பொருட்டு கனிய ஆராய்ச்சி வினைத் திறன் மிக்கதாகப் புதுப்பிக்கப்படுவதுடன், அரசு தனது ஆளுகைப் பிரதேசத்தில் படிப்படியாக கனிய ஆராய்ச்சிகளை ஊக்குவித்து அச் செயற்பாடுடன் தொடர்புபடும்.

i. அரச அதிகாரிகளுக்கு, அரசுக்கு உரித்தான ஆளுகைப் பிரதேசங்களில் கனியங்கள் தொடர்பாக ஆராய்ச்சி செய்யும் பொருட்டு மட்டுப்படுத்தப்படாத உட் பிரவேசிப்பு அனுமதியை வழங்க வேண்டும்.

ii. அரசு சார்பாக கனிய வளங்களுடன் தொடர்புடைய தரவுகளையும், உள் நுழைவுகளையும் பெற்றுக் கொள்ளும் பொருட்டு மூன்றாம் தரப்பினரினால் முன்னெடுக்கப்படுகின்ற கனிய ஆராய்ச்சிகள் மீள் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படும்.

iii. ஏதாவதொரு ஆராய்ச்சியின் ஊடாகக் கனியங்களுடன் தொடர்புடையதாகத் தரவுகள் தோற்றுவிக்கப்படும் சந்தர்ப்பத்தில், அத் தரவுகளை ஒன்று திரட்டுதல் பிரதானமான நோக்கமாகக் காணப்படாதிருப்பினும், அதன் இறுதி விளைவுகளான தரவுகள் மற்றும் அறிவுத் திறனை பொருத்தமான உத்தியோகத்தர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

iv. கடலுக்கடியில் பெருமளவான பிரதேசம் சார்பாக அரசுக்கு உட் பிரவேசிப்பு காணப்படுவதாலும், கண்டங்களின் நிலப் பரம்பலின் விளைவாக மேலும் இப் பிரதேசம் விஸ்தீரணமடைந்து செல்வதாலும் கனிய ஆராய்ச்சிக்குத் தேவையான உபகரணங்கள் மேலும் விருத்தி செய்யப்படும்.

**கோட்பாடு 2 :**

**சமூக-பொருளாதார மற்றும் சுற்றுச் சூழல் எதிர் நோக்குகைகள் மற்றும் தொழிற் துறையின் நிலைப்பாட்டுத் தன்மை போன்றவற்றின் அடிப்படையில், தேசிய மற்றும் வலய ரீதியான / கிராமப்புற பொருளாதாரங்கள் பெறக் கூடிய ஒட்டு மொத்த நன்மைகளையும் கருத்திலெடுத்த வண்ணம் கனிய வளங்களை சுரங்கங்களில் தங்க வைத்தல் தொடர்பாக முடிவெடுக்கப்படும்.**

**கூற்று :**

பெறுமதி ஒன்று சேர்ப்பு நோக்கங்களுக்காகவும், பெறுமதி ஒன்று சேர்க்கப்பட்ட கைத்தொழில்களுக்கான மூலப் பொருட்களாகவும் இத்தகைய பயன்பாடுகளுடன் தொடர்புடைய முறையான மதிப்பீடு மற்றும் பொருளாதார நம்பகத் தன்மை போன்ற விடயங்களின் அடிப்படையில் நாட்டிலுள்ள கனிய வளச் சுரங்கங்கள் பரிசீலிக்கப்படும். அச் சுரங்கங்களின் மூலம் பெறக் கூடிய கனியங்களின் அளவு மற்றும் பங்குதாரர்கள் பெறக் கூடிய பலன்கள் போன்றவற்றை அதிகரிக்கும் அதே வேளை, சுற்றுச் சூழலுக்கு ஏற்படக் கூடிய பாதிப்பை குறைப்பதற்குத் தேவையான அனைத்து முயற்சிகளும் முன்னெடுக்கப்படும்.

**உபாய வழி :**

(அ) கனியத்தின் (யங்களின்) பொருளாதாரச் சாத்தியக் கூற்றை மதிப்பிடும் செயற்பாட்டை உயரளவில் பின்பற்ற வேண்டியுள்ளது,

i. அத்தகைய கனிய வளங்களின் பொருத்தமான பயன்பாடு தொடர்பாகக் கருதுகையில் கனியங்களை அகழ்வு செய்வதற்கு அனுமதி வழங்கப்படுவதுடன், அத்தகைய கனியங்களின் பெறுமதி குறைவடையக் கூடிய குறைப் பயன்பாட்டிலிருந்தும் அவை தடுக்கப்படும்.
ii. அத்தகைய கனியத்தை (யங்களை) பயன்படுத்துவதன் வாயிலாக நாட்டிற்கு மிகச் சிறந்த பொருளாதாரப் பலன்களை தோற்றுவிக்கக் கூடிய நிறுவனத்திற்கு சுரங்க அகழ்விற்கான அனுமதி வழங்கப்படும்.
iii. கனியங்கள் பெறப்படும் போக்கின் பிரகாரம் தீர்மானமெடுப்பதற்கு இட வசதிகளை வழங்கிய வண்ணம் தினந்தோரும் மட்டுப்படுத்தக் கூடிய அளவு மதிப்பீடு செய்யப்படும்.
iv. சுற்றாடல் சார்ந்த பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், மூலப் பொருட்களின் தரத் தன்மையைப் பேணும் பொருட்டும் நடப்புத் தொழில்நுட்பம் மற்றும் வினைத் திறனை மேம்படுத்தக் கூடிய உத்திகளைப் பயன்படுத்துவதற்கு ஊக்குவிக்கப்படும்.
v. கடலடியிலிருந்து கனியங்களை அகழ்வு செய்வதற்குத் தேவையான செயன் முறைகள், உபகரணங்கள் மற்றும் அறிவுத் திறனை மேம்படுத்துதல்.
vi. அத்தகைய பலன்களைப் பெற்றுத் தராத தனியார்ப் பிரிவு நிறுவனங்கள் மற்றும் அரச தொழில் முயற்சிகள் உட்பட காணப்படக் கூடிய நிறுவனங்கள் சரியான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு அல்லது அத்தகைய செயற்பாடுகளை மட்டுப்படுத்த வேண்டிய தேவை மேலெழும்.

(ஆ) தொடர்புடைய ஒழுங்கு விதிகளின் பிரகாரம் சுற்றாடலுக்கு மிகக் குறைந்த பாதிப்பு ஏற்படக் கூடிய வகையில் சுரங்கத்தின் சிறந்த நிலைப்பேரைப் பேணுதல்.

i. எந்தவொரு கனியத்தையும் அகழ்வு செய்யும் செயற்பாட்டை ஆரம்பிப்பதற்கு முன், அத்தகைய கனியங்களைப் பிரித்தெடுக்கும் தோற்றுவாய்களைக் கணிப்பிடும் பொருட்டு தேவையான முதல் நிலைத் தரவுகள் (சுற்றாடல், நிலவியல் போன்றவை) ஒன்று சேர்க்கப்படும்.

ii. சுரங்க அகழ்வு மற்றும் சுரங்க அகழ்வுடன் தொடர்புடைய செயற்பாடுகள் காரணமாக எதிர்மறையான விளைவுகள் ஏற்படுமிடத்து சுரங்க அகழ்வுடன் தொடர்புடைய நிறுவனம் தொடர்புடைய அரச நிறுவனங்களின் உதவியுடன் அத்தகைய பாதிப்புகளை மதிப்பீடு செய்ய வேண்டியிருப்பதுடன், பாதிப்புக்குள்ளான தரப்பினருக்கும், நிறுவனங்களிற்கும் நட்ட ஈடுகளை செலுத்துவதற்கு ”சுரங்க கைத்தொழிலாளி” பொறுப்புடையவராகக் காணப்படுகின்றார்.

iii. சுரங்க அகழ்வுக் கட்டத்தின் போது பூஜ்ஜிய கழிவுக் கொள்கை ஊக்குவிக்கப்படுவதுடன், அதனைத் தயாரிக்கும் மற்றும் விற்பனை செய்யும் கட்டம் வரையான செயற்பாடுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும்.

iv. மறு சீரமைப்பு மற்றும் மீள் கட்டமைப்பு ஆகிய விடயங்கள் சுரங்க அகழ்வுத் திட்டத்தின் கீழான மிக முக்கியமான பாகங்களாகக் காணப்படுவதுடன், அச் செயற்பாடுகள் தொடர்புடைய அதிகாரிகளினால் மிக நுணுக்கமாக மேற்பார்வையிடப்படும்.

v. அதி தீவிர பாதுகாப்பு தராதரங்களின் கீழ் வரையறுக்கப்பட்ட பிரதேசங்களில் மாத்திரமே கனிய அகழ்வுக்கான அனுமதி வழங்கப்பட்டிருப்பதுடன், அதன் பொருளாதாரச் சாத்தியப்பாடு மற்றும் தோற்றுவாய் மூலமான சுற்றாடல் தாக்கம் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்ட பிற்பாடு அது மிக நுணுக்கமாக மேற்பார்வையிடப்படும்.

vi. தேவையான சந்தர்ப்பத்திலும், தேவையான கட்டங்களிலும் அவற்றை அகழ்வு செய்யக் கூடிய வகையில் அதி கூடிய கனியத் தோற்றுவாய் காணப்படுகின்ற காணிகளின் அபிவிருத்திச் செயற்பாடுகளை மட்டுப்படுத்த வேண்டியுள்ளது. எதிர்க்காலத்தில் அகழ்வுப் பணிகளுக்கென இத் தோற்றுவாய்ப் பிரதேசங்களை பாதுகாக்கக் கூடிய கனிய வளத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும்.

(இ) சுரங்கமொன்றின் வாழ் தகவு காலம் நிறைவடைந்த பிற்பாடு, அகழ்வு மேற்கொள்ளப்பட்ட பிரதேசங்களை முறையான மறு சீரமைப்புத் தராதரங்களுடன் பாதுகாக்குக் பொருட்டு ”சுரங்கத்தை மூடுதல்” செயற்பாட்டிற்குப் பொருத்தமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

**கோட்பாடு 3 :**

**மாநிலத்திற்குப் பொருத்தமான மற்றும் வருமானத்துடன் ஒத்திசையக் கூடிய வகையாக பெறுமதி ஒன்று சேர்த்தல் மற்றும் தயாரிப்பு மேம்படுத்துகையின் வாயிலாகத் தேசிய கனிய வளம் மேலும் விருத்தி செய்யப்படும்.**

**கூற்று :**

உள் நாட்டுக் கனியங்களின் உள்ளகத் தர நிலைகள் மற்றும் செயலாக்க வாய்ப்புகள் தொடர்பாகக் கண்டறியப்பட்டு, முதலீட்டாளர்களுக்கு அதிகபட்ச முதலீட்டின் மூலம் அதிக வருமானம் மற்றும் பல்வேறுபட்ட வருமான வழிகளை தோற்றுவிக்கக் கூடிய வகையில், அத்தகைய கனியங்களுக்கு பெறுமதி ஒன்று சேர்ப்பதற்கென பொருத்தமான மற்றும் தகுதி வாய்ந்த உள் நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இதன் வாயிலாக நாட்டிற்கு அதீத நன்மைகள் கிடைக்கும்.

**உபாய வழி :**

(அ) பொருளாதாரப் பலன்களை மேம்படுத்தும் பொருட்டு உள் நாட்டுக் கனியங்களின் உள்ளகத் தர நிலைகள் மதிப்பிடப்படும்.

i. உள் நாட்டுக் கனியங்களை அவற்றின் மூல வடிவில் அங்கீகரிப்பதற்கும், முத்திரையிட்டு சான்று படுத்துவதற்கும் ஊக்குவிக்கப்படும்.

ii. பெறுமதி ஒன்று சேர்க்கப்பட்ட வடிவில் தரமுயர்ந்த கனியங்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் சர்வதேச சந்தையை மையப்படுத்திய ஏற்றுமதி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு சந்தை வாய்ப்புகள் தொடர்பாகவும், சந்தை நுண்ணறிவு தொடர்பாகவும் கண்டறியப்படும்.

iii. நாட்டிற்கு கிடைக்கக் கூடிய பலன்களை மிகக் கவனமாக ஆராய்ந்து, தரமான கனிய வளங்களைப் பெருமளவில் பயன்படுத்துவதற்கு வாய்ப்புகள் கிடைக்கும்.

(ஆ) முதலீட்டாளர்களுக்கான போட்டித் தளத்தை உருவாக்குவதன் மூலம் செயலாக்க மற்றும் பெறுமதி ஒன்று சேர்க்கை வழி முறைகள் ஊக்குவிக்கப்படும்.

i. கனியங்களுடன் தொடர்புடைய ஏற்றுமதிக் கொள்கையின் கீழ் அவை புதுப்பிக்க முடியாத வளங்கள் என்பதையும், ஒவ்வொரு சுரங்கமும் இறுதியில் முற்றாக கனியங்களற்ற நிலைக்கு உள்ளாவதையும் அல்லது இலாபமற்றதாக மாறுவதையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். எனவே, ஏற்றுமதிக் கொள்கையானது நாட்டின் நீண்ட காலத் தேவைகளை ஆராய்ந்து, உள் நாட்டு ரீதியாகப் பெறுமதி ஒன்று சேர்க்கப்பட்ட தொழிற் துறையின் வாழ்வாதாரம் மற்றும் வளர்ச்சிக்குப் பல்வேறு வகையில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய குறைந்த பட்ச அல்லது பெறுமதி ஒன்று சேர்க்கபடாத எவ் வடிவத்திலேனும் கனியங்கள் ஏற்றுமதி செய்யப்படுவதை தடை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

ii. உள் நாட்டில் கனியத்துடன் தொடர்புடைய தொழிற் துறையின் நிலைப்பாட்டிற்கு உள்ளகக் கனியப் பற்றாக்குறை அல்லது போதியளவில் கிடைக்காத அச்சுறுத்தல் போன்றவை காணப்படுமிடத்து, அக் கனியங்களை இறக்குமதி செய்வதன் ஒட்டுமொத்த பலன்களையும் கவனமாக ஆராய்ந்த பிற்பாடு அக் கனியங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்படும்.

iii. பெறுமதி ஒன்று சேர்க்கை கணிசமான அளவில் காணப்படுமாயின், அத்தகைய ஏற்றுமதியின் மூலம் நாட்டுக்குக் கிடைக்கக் கூடிய ஒட்டுமொத்த இலாபத்தையும் கருத்திலெடுத்து, அக் குறித்த கனியப் பதார்த்தத்தை இறக்குமதி செய்து அதனை பெறுமதி ஒன்று சேர்க்கப்பட்ட கனியமாக மீள் ஏற்றுமதி செய்யலாம்.

iv. உள் நாட்டு நடப்பு நிலைமைகளின் பிரகாரம் பொருத்தமான மற்றும் இலாபகரமான செயலாக்க நுட்பங்கள் மற்றும் கனியங்களின் பெறுமதி ஒன்று சேர்க்கை நடவடிக்கைகளின் விருத்தி தொடர்பான ஆராய்ச்சிகள் தொடர்பாகப் பெருமளவில் கவனம் செலுத்தப்படும்.

**கோட்பாடு 4 :**

**சுற்றுச் சூழல் பாதுகாப்பு மற்றும் பேண் தகு வளர்ச்சி உறுதி செய்யப்படும்**

**கூற்று :**

**கனியப் பிரித்தெடுப்பு மற்றும் பெறுமதி ஒன்று சேர் பொறி முறை ஆகிய இரண்டு செயல்முறைகளும் தவிர்க்க முடியாத வகையில் சுற்றுச் சூழலில் தாக்கத்தை ஏற்படுத்தக கூடிய விடயங்கள் என்பதை உணர்ந்து, தேசிய சுற்றாடல் சட்டத்தின் (NEA) கீழான ஒழுங்கு விதிகளைத் தவறாது பின்பற்றுவதன் வாயிலாக ஏற்படக் கூடிய எதிர் மறையான தாக்கத்தைக் குறைப்பதற்குத் தேவையான சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும். எனவே, சுற்றுச் சூழல் தாக்கம் தொடர்பாக சூழல் தாக்க மதிப்பீட்டு செயல்முறை, புனரமைப்பு, மறுசீரமைப்பு மற்றும் கண்காணிப்பு போன்ற அம்சங்கள் மிகவும் பொருத்தமான மற்றும் நம்பகமான முறையில் மேற்கொள்ளப்படும்.**

**உபாய வழி :**

(அ) கனியங்களுடன் தொடர்புடைய செயற்பாடுகளின் கீழான ஒவ்வொரு நடவடிக்கையும் சுற்றுச் சூழல் மற்றும் சமூகத்தில் (பொது மக்கள் மற்றும் சொத்துக்கள் உட்பட) ஏற்படுத்துகின்ற பாதகமான தாக்கங்களைத் தவிர்ப்பதற்கும், அவற்றைக் குறைப்பதற்கும் முன்னெடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளாகக் காணப்படுவதுடன், அவை கனிய வளத் துறையில் ஈடுபட்டுள்ள தனியார் நிறுவனங்கள் மற்றும் SOE கள் இரண்டிற்கும் சமமாக பொருந்தக் கூடிய விடயங்களாகக் காணப்படும்.

(ஆ) பெறுமதி ஒன்று சேர்க்கையுடன் கூடிய பூஜ்ஜியக் கழிவுக் கொள்கை ஊக்குவிக்கப்படும்.

(இ) அனைத்து வகையான மாசுகளையும் தடுக்கும் பொருட்டு ”மாசுபடுத்துபவர் பணம் செலுத்தும் கொள்கை” போன்ற சந்தை அடிப்படையிலான உத்திகள் திருத்தத்துக்கு உள்ளாக்கப்படும்.

(ஈ) கண்டறியப்படாத ஆக்கிரமிப்பு இனங்கள், தீங்கு விளைவிக்கும் நச்சு இரசாயனப் பதார்த்தங்கள் மற்றும் கதிரியக்க அல்லது பிற உயிரியல் ரீதியான, உடல் ரீதியான அல்லது இரசாயன ரீதியான வழிமுறைகளினால் ஏற்படக் கூடிய கனிய மாசாக்கம் மற்றும் தொற்று நோய்களைத் தடுக்கும் பொருட்டு நிலையான இயக்க நடைமுறைகள் உருவாக்கப்படும்.

(உ) நிலையான அடிப்படையிலான சுரங்க தொழில்நுட்பங்களும், நன்னெறி மிக்க சிறந்த நடைமுறைகளும் அறிமுகப்படுத்தப்படும். அவை குறைந்த ஆபத்து, பேரழிவு அற்ற மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் பொது மக்களுக்குக் குறைந்தளவில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாகவமையும்.

(ஊ) சுரங்கங்களின் தராதர நிலைகளை மாற்றியமைப்பதன் மூலம் பணியாளர்களின் உடல் நலம் மற்றும் தொழிற்சார் பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகள் உறுதி செய்யப்படும்.

(எ) சுற்றுச் சூழல் பாதிப்புக்குள்ளான பகுதிகளில் சுரங்கம் உள்ளிட்ட கனியங்கள் சார்ந்த தொழில்கள் செயற்படுத்தப்படுவதற்கு முன் அனுமதி பெறப்படும்.

**கோட்பாடு 5 :**

**இவ் ஆவணத்தின் கீழான கொள்கை இலக்குகள் மற்றும் கொள்கை நோக்கங்களை எளிதாக்கும் பொருட்டு ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு தொடர்பாக கவனம் செலுத்தப்படும்.**

**கூற்று :**

கனியங்களுடன் தொடர்புடைய அம்சங்கள், ஆய்வு உத்திகள், மிகச் சிறந்த சுவீகரிப்பு நடை முறைகள் மற்றும் பொது மக்களினது வாழ்க்கைத் தர நிலைகளை மேம்படுத்துவதற்கான பெறுமதி ஒன்று சேர்க்கை வாய்ப்புகள் போன்றவை தொடர்பான ஆராய்ச்சிகள் மற்றும் மேம்பாட்டின் முக்கிய மையமாக இலங்கை மற்றும் வெளி நாடுகளில் செயற்படக் கூடிய பல்கலைக்கழகங்கள் திகழும்.

**உபாய வழி :**

அ) கனியக் கைத்தொழில் ஆராய்ச்சி தொடர்பான முன்னுரிமைப் பகுதிகளை கண்டறியும் பொருட்டு இடைக்கிடையில் மதிப்பீடுகள் நடாத்தப்படும்.

ஆ) அரச தனியார் கூட்டாண்மை (PPP) மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் / முதலீட்டாளர்கள் போன்ற கனியங்களுடன் தொடர்புடைய தொழில்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் பிற துறைகளின் உள்ளீடுகளை அனுமதிக்கும் வகையில், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு ஆகிய செயற்பாடுகள் கூட்டாக விரிவுபடுத்தப்படும்.

இ) தொடர்புள்ள நிறுவனங்களிடையே நிபுணத்துவம், தகவல் பரிமாற்றம் மற்றும் பொது வசதிகளைப் பகிர்ந்து கொள்ளும் பொருட்டு ஆராய்ச்சிச் செயற்பாடுகள் கட்டமைக்கப்படும்.

ஈ) கனியங்கள் மற்றும் கனியங்களுடன் தொடர்புடைய தொழிற் துறை சார்ந்ததாக சந்தை விருத்தி, மேம்பாடு போன்ற விடயங்கள் முன்னெடுக்கப்படுவதுடன், பல்வேறு நுணுக்கமான சந்தை நுண்ணறிவு தகவல்களுக்கான அணுகல் செயற்பாடுகளும் விரிவுபடுத்தப்படும்.

**கோட்பாடு 6 :**

**இக் கொள்கை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளை அடையும் பொருட்டு புதிதாக சட்ட திட்டங்கள், நிர்வாக செயற்பாடுகள் மற்றும் நிதி விதிமுறைகள் அறிமுகப்படுத்தப்படும்.**

**கூற்று :**

இவ் ஆவணத்தின் கீழான கொள்கை கோட்பாடுகள் மற்றும் நோக்கங்களை அடையும் பொருட்டு நடப்பு ஒழுங்கு முறை, நிர்வாக மற்றும் நிதிக் கட்டமைப்பு போன்ற விடயங்கள் போதுமானதாகக் காணப்படுவதில்லையெனும் விடயத்தை உணர்ந்து, கொள்கைக் கோட்பாடுகளை எய்துவதற்குத் தேவையான மாற்றங்கள் கண்டறியப்பட்டு, அவை செயற்படுத்தப்படும்.

**உபாய வழி :**

(அ) இவ் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கொள்கை கோட்பாடுகள் மற்றும் குறிக்கோள்களை இவ் உபாய வழி முறைகள் எந்தளவுக்குச் சிறப்பாக சித்தரிக்கின்றன என்பதைத் தீர்மானித்து நடப்பு சட்டங்கள், ஒழுங்கு விதிகள், நிர்வாக அமைப்புகள் மற்றும் நிதி விதிமுறைகள் தொடர்பாக ஆராயப்படும்.

(ஆ) தேவைப்படுமிடத்து இக் கொள்கைகளை வெற்றிகரமாக அடையப் பெற்று, தேவையான கட்டமைப்பு மாற்றங்களைச் செய்யும் நிறுவனங்களை மீள் கட்டமைக்கும் பொருட்டு ஒரு உச்ச கட்ட நிறுவன அமைப்பு உருவமைக்கப்படும்.

(இ) நாட்டிற்குத் தேவையான ஏற்றுமதி வருமானத்தின் கீழான வருமான் / அறவீட்டு வரிகளைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு தொடர்புடைய அதிகாரிகளின் உதவியுடன் நிதிக் கொள்கைகள் உருவமைக்கப்பட்டு வலுப்படுத்தப்படும்.

(ஈ) தற்சமயம் நடைமுறையிலுள்ள சட்டங்கள், பெறுமதி ஒன்று சேர்க்கப்பட்ட கனிய உற்பத்திக்கான வெளிநாட்டு உரிமைக் கட்டுப்பாடுகள் (ஏதேனும் இருப்பின்) மற்றும் இத் தேசியக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கான சட்ட ரீதியான தடைகள் போன்ற தொடர்புடைய வரி அறவீடுகள் மற்றும் கனியத் துறை சார்ந்த ஒழுங்கு முறை அமைப்புகள் போன்ற விடயங்களின் கீழ் மதிப்பாய்வு செய்யப்படும்.

**கோட்பாடு 7 :**

**காணி உரிமம் மற்றும் கனிய உரிமைகள் தொடர்பான பிரச்சினைகள் விவேகமான முறையில் தீர்க்கப்படும்**

**கூற்று :**

காணி உரிமம் மற்றும் கனிய வள உரிமைக்கு இடையேயான தெளிவின்மை மற்றும் சாத்தியமான மோதல் நிலைகள் போன்ற விடயங்களிலிருந்து நில உரிமையாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் அதே வேளை, ஆய்வுகளை ஊக்குவிக்கக் கூடிய நீண்ட காலத் தீர்வைக் கண்டறிவதற்குத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

**உபாய வழி :**

(அ) காணி உரிமையாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் அதே வேளை, தனியார் நில உரிமையினால் முன்னெடுக்கப்படும் கனிய அகழ்வுத் தடைகள் நீக்கப்படும்.

(ஆ) ஒழுங்கு விதிமுறை அதிகாரிகள் (புவிச் சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் மற்றும் இரத்தினக் கல் மற்றும் தங்காபரண அதிகார சபை போன்றவை...) தோட்ட நிலங்கள் உள்ளிட்ட அரச நிறுவனங்களினால் நிர்வகிக்கப்படுகின்ற காணிகளில் காணப்படுகின்ற கனிய வளம் நிறைந்த இடப் பரப்புகளை நிர்வகிப்பதற்குத் தேவையான இட வசதிகள் ஒழுங்கு செய்யப்படும்.

***பிற்சேர்க்கை:***

**கொள்கை அமுலாக்கம்: பொறுப்பு மற்றும் அதிகாரம்**

ஒவ்வொரு சட்டங்களின் பிரகாரமும் கொள்கைக் கோட்பாடுகளை எளிதாக்குவதற்கான முக்கிய ஊன்றுகோளாகவும், தூண்களாகவும் மேற்கூறிய உத்திகள் கருதப்படுகின்றன. மேலே குறிப்பிட்டுள்ள பிற துறை சார் அமைச்சுகள் மற்றும் நிறுவனங்களுடன் கலந்தாலோசித்த பிற்பாடு தேவையான சந்தர்ப்பங்களில் உத்திகளையும், நுட்பங்களையும் செயற்படுத்துவதற்குரிய பொறுப்பும், அதிகாரமும் ஒழுங்குமுறை அமைப்புகளுக்குக் கையளிக்கப்படும். அத்தகைய ஆலோசனைகளின் வாயிலாக, 6 ஆவது கொள்கையின் பிரகாரம், அத்தகைய அமைப்புகள் கொள்கையை செயற்படுத்துவதற்கான சட்ட சபை கட்டமைப்பையும், ஒழுங்குமுறை கட்டமைப்பையும் உருவமைக்க வேண்டும். அத்தகைய ஒழுங்குமுறை அமைப்புகள், சட்டங்களை வகுக்கும் கட்டமைப்புடன் கூட்டிணைந்து கொள்கை அமுலாக்கத்தை எளிதாக்குவதற்கு உதவும் முக்கிய செயற்பாடுகளை கோடிட்டு அடையாளமிட வேண்டியுள்ளது. இத்தகைய மிக முக்கியமான செயற்பாடுகள் தொடர்புடைய அதிகாரிகளின் நிறுவனத் திட்டங்களில் இன்றியமையாத அம்சங்களாகக் காணப்படும்.

பின்வரும் ஒழுங்குமுறை அமைப்புகள், சட்டத் திருத்தங்களின் (தேவையான சந்தர்ப்பங்களில்) வாயிலாக கனியக் கொள்கையை மிக எளிதாக்கும் நிறுவன அமைப்புகளென அடையாளம் காணப்பட்டுள்ளது. கனியக் கொள்கையின் கொள்கை உறுவாக்கத்தின் பிரகாரம், தகுந்த ஒழுங்கு விதிகளை உறுவமைத்தல் மற்றும் அடிப்படை செயற்பாடுகளை உருவாக்குதல் மிக முக்கியமான விடயங்களாகக் காணப்படுகின்றன.

இவ் விடயத்திற்குப் பொறுப்புள்ள நிறுவனங்களாக:

1. புவிச் சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் - GSMB
2. தேசிய இரத்தினக் கல் மற்றும் தக்காபரண அதிகார சபை - NGJA
3. பெட்ரோலிய வளங்கள் அபிவிருத்தி செயலகம் - PRDS

செயற்படுவதுடன், மேற்கண்ட நிறுவனங்கள், இத் தேசிய கனியக் கொள்கை தொடர்பான முக்கியமான விடயங்களில் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் ஆதரவையும், தேவைப்படும் சந்தர்ப்பங்களில் நிதி அமைச்சின் ஒப்புதலையும் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கும்.

**பங்குதாரர் ஈடுபாடு:**

பங்குதாரத் (பொது மக்கள் உட்பட) தரப்பினர் மற்றும் தொடர்புடைய நிறுவனங்கள் இக் கொள்கையின் வாயிலாக பாதிக்கப்படக் கூடியனவாகக் காணப்படுகின்றன. இதன் விளைவாக, பொருத்தமான ஒழுங்கு முறை அதிகாரிகளினால் ஒரு குழுவாக ஏற்றுக் கொள்ளக் கூடிய கட்டமைப்பை உறுவமைப்பதும், குறித்த ஆவணத்தை இறுதியாக்குவதுடன் தொடர்புடைய பிரதிநிதிகள் பங்குதாரர்களின் முன் சென்று அவர்களிடமிருந்தும் கருத்துக்களைப் பெறுவதும் மிக முக்கியமான விடயங்களாகக் காணப்படுகின்றன. அத்தகைய கூட்ட மன்றத்தில் முன்மொழியப்பட்ட கொள்கை தொடர்பாக ஒழுங்குமுறை அமைப்புகள் தத்தமது பங்களிப்பைப் புரிந்து கொள்ள வேண்டும். மேலும் பங்குதாரர் கூட்டத்தை நடத்துவதற்கு முன், கனியக் கொள்கையுடன் கூட்டிணைந்து ஒரு வேலைத் திட்டத்தை உருவாக்குவது அவசியம்.

எடுத்துக்காட்டாக, முதன்மைக் கனியங்களில் தங்கியிருக்கும் தொழில்கள், குறிப்பாக ஒட்டுமொத்த கொள்கை நோக்கங்களைக் காட்டிலும் அவற்றின் முக்கியமான குறிப்பிட்ட கனிய வகை (கள்) மீது அதிக நாட்டம் கொண்டதாகக் காணப்படலாம். குறைந்தபட்சம் பிரதானமான கனிய வகைகளுக்கு செயற்பாட்டு உத்திகளை (வேலைத் திட்டங்கள்) உருவாக்குவது மிக முக்கியமான விடயமாகக் காணப்படுவதுடன், பங்குதாரர்களுடன் குறிப்பாக தொழிற் துறையுடன் கூட்டிணைந்து உற்பத்தி சார் விவாதங்களில் ஈடுபடுவது கடினமான பணியாகக் காணப்படும்.

**கொள்கை அமுலாக்கம்: கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு**

சுற்றாடல் அமைச்சு கனியக் கொள்கையை கண்காணித்து செயற்படுத்தும் பொறுப்புள்ள அமைச்சாகக் காணப்படுகின்றது. இருப்பினும், பல்வேறு அமைச்சுக்கள் முழுதும் பரம்பியதாகக் கனியங்களுடன் தொடர்புடைய நிறுவனங்கள் பரம்பியிருப்பதால், தொடர்புடைய அமைச்சுக்களின் பிரதி நிதிகளை உள்ளடக்கியதாக் கண்காணிப்புக் குழு உருவமைக்கப்படும்.

***முக்கியத்துவம் :***

கடற் சார் சூழல் கனியங்களைக் கையாள்வதற்கு உகந்த அதிகாரம் காணப்படுவதில்லையென தொடர்புள்ள கொள்கை விவாதங்கள் வெளிக் காட்டுகின்றன. கடலின் உட் தளத்தில் தேங்கியுள்ள

கனியங்கள் புதியதொரு பரிமாணமாகக் காணப்படுவதால், தேவையான சட்ட திட்டங்களையும், உருவமைப்புகளையும் உருவாக்க வேண்டிய கடப்பாடு அரசுக்குள்ளது. தற்சமயம் நடைமுறையிலுள்ள சட்ட ஒழுங்கு விதிகள் தோற்றம் பெறுகின்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தேவையான சட்ட உருவாக்க மற்றும் செயற்பாட்டுக் கட்டமைப்பைத் தன்னகத்தே கொண்டதாகக் காணப்படுவதில்லை.